எடுத்துச் சொல்லவேண்டியிருக்கிறது. இந்தியாவின் சுதந்திரமும், காங்கிரஸின் மூலமாகவும், மாகாண சபைகள் மூலமாகவும், சட்ட சபைகள் மூலமாகவும், இந்தியா அடைந்திருக்கும் முன்னேற்றமும், இதேபோல் இன்னும் மேன்மேலும் முன்னேற்றம் அடையவேண்டுமென்ற நம்பிக்கைகளும், ஜேர்மானியர்களை பிரிடன் தோற்கடிப்பதைப் பொறுத்துத்தான் இருக்கிறது. ஜெர்மனி யுத்தத்தில் ஜய மடையுமேயானால் இந்தியா இப்பொழுது அனுபவிக்கும் சுதந்திரத்தைக்காட்டிலும் அதிகமாக அடைவதென்றோ அல்லது இதேவழியில் "பூரண்சுதந்திரம்" அடைவதென்றோ பேசவே இடமில்லை. நாஸிகளின் காலின் கீழ் மிதியுண்டு தனக்குள்ள எல்லா பாத்தியங்களையும் இழப்பதுடன், இந்தியாவின் சுதந்திரமும் அடியோடு அழிக்கப்பட்டுவிடும். ஐரோப்பாவில் நடப்பதுபோலவே இந்தியாவிலும், சமாதானவாதிகளும், அஹிம்சா பிரசாரகர்களும் ஜெர்மானியர்களின் வெடிகுண்டுகளுடையவும், டாங்கிகளுடையவும் தயவில் வாழவேண்டியதாயிருக்கும்.

ஹிந்து, முஸ்லீம்கள், பிரிடிஷ் இந்தியா, சுதேச ஸமஸ்தானங்கள் இவைகளைப்பிரித்துவைக்கும் பிரச்னைகளும் முக்கியமானவைகள் தான். பிரிடிஷாருக்கும், இந்தியர்களுக்கும் காலத்தில் ஏற்படக்கூடிய அமைதியும் அந்த பிரச்னைகளைப் பொறுத்ததாயிருக்கலாம். தங்கள் முழுகவனத்தையும் செலுத்தி, அவைகளை சீக்கிரமாகத் தீர்க்கும் வழியைக்கண்டு பிடிப்பதற்காகவே, அந்த பிரச்னைகளைப்பற்றி கேட்கப்படுகிறது. பிரிடனில் எங்களுக்குள்ளாக ராஜீய சம்பந்தமான அபிப்பிராயபேதங்கள் கக்ஷிகளைப்பிரித்துவைத்து கொஞ்சகாலத்துக்கு முன்வரை கோபமானவாதங்களுக்கும் காரணமாய் இருந்து வந்தது. ஆனால் ஸ்வதந்திர சம்மந்தமான ராஜீயகொள்கைகளை அழிக்க முற்பட்டிருக்கும் சத்துருவை நாம் ஒன்று சேர்ந்து எதிர்க்காதவரை நமக்குள்ளாக தகரார்கள் செய்து கொள்ளும் ஸ்வாதீனம்கூட நமக்கு இருக்குமா என்ற கேள்வி நம்முடைய தகரார்களுக்கெல்லாம் அப்பால் எழுகிறதென்பதை எங்களுடைய எல்லாக் கக்ஷிகளும் தெரிந்து கொண்டுவிட்டன.

இந்தியர்களுக்குள் ஏற்பட்டிருக்கும் ராஜீய பிரச்னைகளை எல்லாக்கக்ஷியினரும் ஏகோபித்துத் தீர்த்துக்கொள்வதைக்காண ஒவ்வொரு ஆங்கிலேயனும் விரும்புகிறான். அவ்வாறு கக்ஷித்தகரார்களைத் தீர்த்துக்கொள்ள சாத்தியமில்லாவிட்டாலும், இந்தியாவிலுள்ள எல்லாக்கக்ஷியினரும் ஜெர்மனிக்கும் பிரிடனுக்கும் நடக்கும் யுத்தத்தில் தங்களுடைய ஸ்வதந்திரம் ஆபத்தான நிலைமையில் இருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமென்றும், யுத்தத்திலிருந்து விலகியிருப்பதாலோ, தங்களுடைய ஸ்வதந்திரத்திற்காகவும், இந்தியர்களின் ஸ்வதந்திரத்துக்காகவும் போராடிவரும் பிரிடனை சங்கடமான நிலைமையில் வைப்பதாலோ இந்தியர்கள் தங்களுக்கே நியாயமாக நடந்து கொள்கிறார்களா என்பதைச் சற்று ஆலோசித்துப் பார்க்கவேண்டுமென்றும் இந்தியர்களை ஆங்கிலேயர்கள் கேட்கிறார்கள்.

சுதந்திரமா அல்லது உலகத்துக்கே கொடுங்கோன்மையா என்பதுதான் இப்பொழுது தீர்மானிக்கப்படவேண்டிய விஷயம். இந்திய ஸ்நேகிதர்களைப்பற்றி நான் தெரிந்துகொண்டிருக்கிற வரையில், தங்கள் உதவியன்னியிலேயே இந்த யுத்தத்தில் பிரிடன் ஜயத்தை அடைந்துவிடுமென்ற நம்பிக்கையில் தாங்கள் கேவலம் வேடிக்கை பார்ப்பவர்களாக மட்டில் இருந்தால் போதுமென்று முழுமனதுடன் அவர்கள் நினைக்கமாட்டார்கள் என்று நான் உறுதியாய் நினைக்கிறேன்.

வார் யுத்தச் செய்திகள்.

(26—9—40 லிருந்து 2—10—40 வரை).

பிரிடிஷ்-விமானப்-படையின் வெற்றிகள்.—ஸெப்டம்பர் மாதம் 21-ம் தேதியோடு முடிந்த ஒரு வாரத்துக்குள் பிரிடிஷ் விமானங்கள் எதிரி தேசங்களுக்குள் புகுந்து சேதம் செய்தது :—சானல் துறைமுகங்களும், படையெடுப்பு-நிலயங்களும்—48; கப்பல் கூட்டங்கள்—31; சிறு கப்பல்கள்—18; யுத்த தளவாட ஸ்டோர்கள்—8 ; சோதனை தீபங்கள்—7 ; பீரங்கி ஸ்தாபனங்கள்—6 ; பெரிய கப்பல்கள்—5 ; ரெயில்வே ஸ்டேஷன்கள்—29 ; எண்ணெய் ஸ்டோர்கள்—3 ; சக்தி (Power)-உற்பத்தி சாலைகள்—3 ; வெடி மருந்து உற்பத்திசாலை—1 ; விமான நிலயங்கள் (பெர்லின் நிலயம் உள்பட)—14. ஒரு வாரத்துக்கு இது போதுமான வேட்டையென்றே சொல்லாம். பொய்ப்பிரசார வல்லபரான கோயபல்ஸ் குள்ளன்கூட பிரிடிஷ்-எதிர்ப்பினால் ஜெர்மனிக்கு ஏற்பட்டிருக்கும் விபரீதத்தை ஒப்புக்கொள்ளும்படியாய் விட்டது. இந்த வாரத்தில் பெர்லின் நகரை எதிர்க்காத நாள் கிடையாது. 23, 27 தேதிகளில் பெர்லின்மேல் படையெடுப்பு எதிர்ப்பு பலம்: ஸ்திரீகளும், குழந்தைகளும் நகரத்தைவிட்டு வெளிப்படுத்தப்படுகிறார்கள். குண்டுகள் விழுந்த இடங்களைப்பார்க்க நிருபர்களுக்கு அனுமதி கொடுக்க மறுக்கிறார்கள். பிரெஞ்சு கடற்கரைகளை பிரிடன் எதிர்த்ததிலிருந்து, முதல்தரமான ஜெர்மன் துருப்புகளைச் சேர்ந்த 60,000 பேர்கள் சேதமாம். 15-ம் தேதி 137 விமானங்களைத் தோற்றதிலிருந்து பிரிடனை மறுநாள் படையெடுக்கும் பேச்சு நின்றுவிட்டதாம். லண்டன் தற்காப்பையும், பிரிடிஷ்மக்கள் தைரியத்தையும் தூஷித்த நாளெல்லாம் போய்விட்டது. நாஸிகள், மனமொடிந்து, பயப்படுகிறார்கள். ஹிட்லர் தாது புஷ்டி லேகியம் எங்கே கிடைக்குமென்று பார்க்கிறார். இதற்காக சென்ற வாரத்தில் ஸ்பெயின் தேசத்து மந்திரியை ஜெர்மன் தலைநகருக்கு வரவழைத்து தட்பட்ல் செய்தார்கள். இந்த வாரம் 10-வருஷத்திய உடன் படிக்கை ஒன்றை ஜெர்மனி—இதாலி—ஜப்பான் அரசுகள் கையொப்பம் செய்ததிலிருந்து ஏதோ பிரமாதமான காரியத்தைச் சாதித்துவிட்டதாகச் சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

மூவரசு-உடன்படிக்கை.—இதைச் செய்து முடித்ததில் ஜெர்மனிக்குப் பெருமை அதிகம். உலகத்திலேயே இது மகத்தான உடன்படிக்கையாம். ஆனால் 'நீரில்—நனைந்துபோன—வெடிக்காத—வாணம்' என்று இதை பிரிடன் மதிக்கிறது. கோமாளிக்காரன் கர்ணம் போடுவதை ஒத்திருக்கிறது என்பது ஆசியாவின் அபிப்பிராயம். இந்த உடன்படிக்கையில் எதிர்பாராதது ஒன்றுமில்லை. இதில் விசேஷம் ஒன்றும் கிடையாது. மூன்று கொள்ளைக்காரர்கள், கொள்ளை அடிப்பதற்கு முன்னதாகவே பங்கு போட்டுக்கொள்ளும் பேச்சைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இதிலிருந்து இவர்களுடைய மனோபாவமும் நன்றாய் வெளியாகிறது. ஜெர்மனிக்கு ஐரோப்பா முழுவதும், ஆபிரிகாவில் பெரும் பாகமும் கிடைத்தால் போதுமாம் : இதாலிக்கு பாக்கி ஆபிரிகாவும், மத்திய

தரைக்கடல் தீரமும் வேண்டுமாம்; ஜப்பானுக்கு ஆசியாகண்டம் போதுமாம். என்ன பேராசை! இதற்காக ஜெர்மன்—இதாலிய—ஐரோப்பிய தலைமையை ஜப்பான் அங்கீகரிக்குமாம்; பதிலாக ஜெர்மன்—இதாலிய அரசுகள் ஜப்பான் உடைய ஆசியா—தலைமையை ஒப்புக்கொள்வார்களாம். இப்பொழுது நடக்கும் ஐரோப்பிய யுத்தத்திலும், சைன சண்டையிலும் புதிதாய் யாராவது சேர்ந்தால், உடன்படிக்கை செய்துகொண்டிருக்கும் இந்த மூன்று அரசுகள் பரஸ்பரம் சைன்யத்தாலும், பணத்தாலும், பொருளாலும், ராஜ்ய தந்திரத்தாலும் ஒத்தாசை செய்து கொள்ளுவார்களாம்.

கடைசி ஷரத்தானது அமெரிகாவுக்குப் பயந்து செய்துகொண்டதாகும். இவ்விதம் பயப்படுவதற்கும் இடமிருக்கிறது. அயோக்யத்தனமாய் ஜப்பான், சமயம் வந்தபோது, அகப்பட்டதைச் சுருட்டப் பார்க்கிறது. இது வரையில் நடுநிலையென்று பாசாங்கு செய்துவிட்டு, இப்பொழுது சண்டையில் சேர வில்லை; ஆனால் சண்டைக்குத் தயாரென்கிறது. இதிலிருந்து அமெரிகாவுக்குப் பக்கத்திலுள்ள பஸிபிக் மகாசமுத்திரத்தில் வம்பு ஏற்படலாம். ஆகவே அமெரிகாவுக்குக் கோபமதிகமாய்க் கொண்டுவருகிறது. ஏற்கனவே ஜப்பானுக்கு அனுப்பிவந்த பெட்ரோலையும், இரும்புத் துண்டுகளையும் அமெரிகா நிறுத்திவிட்டது. வார்ப்பு இரும்பையும், எஃகையும் இனி நிறுத்த யோசிக்கிறது. அமெரிக அக்ராஸனரைத் தேர்ந்தெடுக்கும் சமயம் சமீபித்துவிட்டது. அதற்குள்ளாகவே, அமெரிகா யுத்தத்தில் இறங்கினாலும் இறங்கிவிடலாம்; வெகு பரபரப்பாய்க் கோபா வேசம் கொண்டிருக்கிறது.

இந்த உடன்படிக்கை வரப்போவது பிரிடனுக்கு முன்பே தெரியும். ஆகையால், அமெரிகாவோடு வேண்டிய ஒப்பந்தத்தை ஏற்கனவே செய்து முடித்துக்கொண்டு, வேண்டிய துருப்புகளை (ஆஸ்திரேலிய விமானப் படை உள்பட) மல்யா முதலிய இடங்களில் வைத்துக்கொண்டு தயாராயிருக்கிறது.

ஸ்பெயின்.—நெருப்பில் விழுந்த கொட்டையை, பூனையைக்கொண்டு எடுக்கப் பார்த்த குரங்கைப்போலும், அடுத்த வீட்டுப் பிள்ளையை விட்டு, கிணற்றின் ஆழம் பார்ப்பதுபோலவும், ஜெர்மனி ஸ்பெயினைவிட்டு ஆழம் பார்க்கிறது. ஹிட்லருக்கு வெற்றி நிச்சயமாயிருந்தால் ஸ்பெயினை லக்ஷியம் செய்யமாட்டார். கையிறங்கி விட்டதிலிருந்து ஸ்பெயினின் தயவைத்தேடி அதை பலமாய் ஸ்தோத்திரம் செய்கிறார். ஆனால் ஸ்பெயின் ஏய்படாதென்று தோன்றுகிறது. ஸ்பெயினுக்கு உணவு தான்யங்கள் அமெரிகாவிலிருந்து வரவேண்டும். பிரிடனைப் பகைத்துக் கொண்டால் வாயில் மண் தான்.

பால்கன் நாடுகள்.—கிரீஸைப் பற்றி தூஷணை அதிகப்பட்டுக்கொண்டு வருகிறது. கியாமூரா (Ciamura) என்ற ஆல்பேனிய மாகாணத்தில் மூன்று பேர்களை கிரீஸ் கொலை செய்துவிட்டதாக இதாலி பழிசாட்டுகிறது.

ஸிரியா.—இங்கு 5-ம் படைகள் பலமாய் வேலை செய்கின்றன. ஜெர்மன் பிரசாரகர்கள் இஸ்டான்பூல், டெக்ரானிலிருந்து வந்து ஆட்களைக் கலக்கிறார்கள். ஜென்ரல் டிகால் இயக்கமும் அபிவிருத்தியாய்க் கொண்டுவருகிறது.

எகிப்து.—இது வரையில் பொட்டலைத் தவிர ஒன்றையும் மார்ஷல் கிரேஸ்யானி பிடித்ததாகக் காணோம். 60 மைல் முன்வருவதற்குள் பட்டபாடு போதும். ஸிடி எல் பாரானியில் சைன்யங்கள் களைப்பாறிக் கொண்டிருக்கின்றன. சிவப்பு, வெள்ளை, பச்சை நிறவெடிகளைப் போடுகிறார்கள்—வாண வேடிக்கை போலிருக்கிறது.

நார்வே.—நார்வே தேசத்து அரசரை ஜெர்மனி பஹிஷ்காரம் செய்துவிட்டது. இதற்குப் பதிலாக அரசர் கீழ்க்கண்ட செய்தியைத் தன் பிரஜைகளுக்கு விடுத்து இருக்கிறார் :—

" நார்வேயில் இப்பொழுது நடக்கும் அரசாங்கத்துக்கு, ஜெர்மன் ராணுவ பலத்தைத்தவிர மற்ற பலம் ஒன்றும் கிடையாது. இது ஜெர்மனியின் உத்தரவுப் படிதான் அரசுபுரியும். இதற்கு ஸ்வதந்திரம் கிடையாது; ஆனால் நார்வே யானது ஸ்வந்திரநாடு ; இப்பொழுது நடக்கும் ஆக்ஷியால் தேசம் ஸ்வதந்திரத்தை இழந்துவிட்டது; நாமும், நம்முடைய கவர்ன்மெண்டும் ஸ்வதந்திரம் வரும் வரையில் போர்புரிவோம். நார்வேமக்கள் தைரியத்தையும், விசுவாஸத்தையும் இழக்காதிருக்கவேண்டும். எல்லா நார்வே மக்களின் ஸ்வதந்திரத்துக்காக போர் புரிந்து வெற்றியை அடைவோம்".

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
23—9—40. (திங்கட்கிழமை.)			
	வில்மர்ஸ்டார்ப் (Wilmersdorf) மின்சார உற்பத்திச்சாலை. மோயாபிட் (Moabit), கிளிங்கன்பர்க் (Klingenberg), சார் லட்டன்பர்க் (Harlottenburg) இந்த இடங்களிலுள்ள மின்சார ஆலைகள் ;	......	அநேக இடங்களில் தீப்பிடித்தது. பல கட்டடங்கள், வடக்கு, கிழக்கு பெர்லினில் நாசமாயின பலருக்குக்காயம்.
	டான்ஸி கர்ஸ்ட்ராஸி (Danzi Gerstrasis) காஸ் (Gas) ஆலை, பாட்ஸ்டாம் (Potsdam), லெஹ்டர் (Lehrter) இவைகளி லுள்ள சாமான் கிட்டங்கிகள்; ஸ்பாண்டா (Spandau)விலுள்ள பி. என். டபிள்யூ (B. N. W.) விமானயந்திர ஆலை ;	......	அநேகர் மாண்டனர்.
	ஸைமன்ஸ் (Siemens)ஆலை ; டெம்பிள் ஹாப் (Templehof) விமான—நிலயம் பெர்லின் (Berlin) பிரதேசம். விரோதிகள் ஆக்ரமித்துக்கொண்டிருக்கும் சானல் (Channel) துறைமுகங்கள்.	......	ஆலைமேல் குண்டு விழுந்தது. நாசமடைந்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
23—9—40 (திங்கட்கிழமை)—தொடர்ச்சி.			
	விமான உற்பத்தி ஆலை.—விஸ்மார் (Wismar) கீல் (Kiel) கால்வாயிலிருக்கும் அணைகள் (Lock-gates).	......	சேதமாயின; உபயோகமில்லாமல் போயின.
	கப்பல் கட்டுமிடங்கள், நீற்துமிடங்கள்.—ஹாம்பர்க் (Hamburg), கக்ஸ்ஹாவன் (Cuxhaven), ப்ரமர்ஹாவன் (Bremer-haven), ப்ரமன் (Bremen), விஸ்மார் (Wismar).	......	படுசேதமாயிற்று.
	5—ஈ (E) படகுகள்—காப்கிரினே (Cap-grisnez).	......	எல்லாம் மூழ்கின.
	சாமான் கிடங்குகள்—மன்ஸ்டர் (Munster), ஹானோவர் (Honover).		
	ரயில்பாதைகள்—வட ஜெர்மனி (Germany)	......	பழுதாக்கப்பட்டன.
	கடல்கண்ணி அகற்றும் கப்பல்கள்—இங்கிலீஷ் கால்வாய் (English Channel)	......	இரண்டின்மேல் குண்டு விழுந்தது; ஒன்று சேதமாயிற்று
	அநேக விரோதி விமான நிலயங்கள்		
	விமான நிலயங்கள்—மெனஸ்டிர் (Mena-stir), மாய் அடகா (Mai Adaga).	நஷ்டமில்லை.	2 விமானங்கள்.
	துறைமுகம்—டோப்ருக் (Tobruk).		
24—9—40. (செவ்வாய்க்கிழமை).			
	ப்ரீட்ருச்பெல்டு (Freidrichsfelde) மின்சார ஆலைகள், அருகில் இருக்கும் ஒரு வார்ப்புப் பட்டரை; மின்சார சாமான்களும், இன்னும் அநேக ராணுவ சாமான்களும் செய்யும் ஆலைகள்.—பேர்லின் (Berlin).		
	படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—டெல்ப்ஸிஜி (Delfzigi), ஆஸ்டெண்ட் (Ostend), கலே (Calais), செர்பரோ (Cherbourg), லா ஹவேர் (Le Havre) இன்னும் அநேக இங்கிலீஷ் கால்வாயிலிருக்கும் துறைமுகங்கள்.	......	அநேக படகுகள் மூழ்கின. பெருந்தீயும், வெடிகளும் கிளம்பின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
24—9—40.	(செவ்வாய்க்கிழமை)—தொடர்ச்சி.		
	மின்சார உற்பத்தி ஆலை.—பின்கென்கிர்ட் (Finkenheerd).		
	சாமான் கிடங்குகள்.—ஹாம் (Hamm), ப்ரஸ்ஸெல்ஸ் (Brassels)		தீப்பிடித்தன.
	பீரங்கிகள்.—காப்கிரினே (Capgrisnez).		
	விமான நிலயங்கள்.—விரோதி ஆக்ரமித்திருக்கும் நாடுகள்.		
	துணைக்காவல் கப்பல்கள்.—டர்ஸ்செல்லிங் (Terschelling).		ஒரு கப்பல் குண்டுக்கிரையாகியது.
	காலாட்படைகள் வசிக்குமிடம்.—பிரஸ்ட் (Brest).		ஒரு பெருந்தீ சூழ்ந்தது.
	3 சாமான் கப்பல்கள்.—ப்ரிஸியன் (Frisian) தீவுகள்.		ஒரு பெரிய கப்பல் மூழ்கியது. துறைமுகத்திலிருக்கும் கப்பல் மேல் குண்டு விழுந்தது.
	டொப்ருக் (Tobruk)	...	15 பேர்கள் கொல்லப்பட்டனர்; 70 பேர்களுக்குக் காயம்.
25—9—40.	(புதன்கிழமை).		
	தெற்கு டெகல் (Tegel), கிளிங்கன்பர்கி (Klingenberg) இவைகளிலுள்ள மின்சார ஆலைகள்; ஸ்கோன்பர்கி (Schonberg)லுள்ள ரயில்வண்டிகள் நிற்குமிடம்; சார்லட்டன் பர்குக் (Charlottenberg) நகரிலுள்ள ரயில்வே ஜங்ஷன்; டெம்பிள்ஹாப் (Templehof) விமான நிலயம்; ருடர்ஸ்டார்ப் (Rudersdorf) லுள்ள வெடிமருந்து ஆலை—பேர்லின் (Berlin).		அதிகச் சேதம் விளைந்தது; அநேக இடங்களில் தீப்பிடித்தது. பலருக்குக் காயம். படையெடுப்பு வெகு நேரம் நீடித்தது.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
25—9—40. (புதன்கிழமை)—தொடர்ச்சி.			
	கப்பல் நிற்குமிடம், ராணுவ முக்கியத்வம் வாய்ந்த இடங்கள்.— கீல் (Kiel.)	......	ஜெர்மன் யுத்தக் கப்பலுக்கருகே வெடிகுண்டு விழுந்தது.
	சாமான் கிடங்குகள்.—ஆஸ்னுப்ரக் (Osnabruck), ஏராங் (Ehrang), ஹாம் (Hamm), மான்ஹீம் (Monheim), ஹானோவர் (Hanover).	......	நாசமாயின.
	சிறிய, பெரிய கப்பல்கள், யுத்த சாமான் கிடங்குகள்.—ஆண்ட்வர்ப் (Antwerp), ப்ளஷிங் (Flushing), ஆஸ்டென்ட் (Ostend), டன்கர்க் (Dunkirk), கலே (Calais), புலாயின் (Boulogne).		
	கப்பல்கள், எண்ணெய்த் தொட்டிகள்.— பிரஸ்ட் (Brest), அபிஸீனியாவி (Abyssinia)லுள்ள மாஜி (Maji).		
	வேவு பார்த்தல்.—அபிஸீனியா (Abyssinia), இதாலியன் ஸோமாலிலண்ட் (Somaliland).	நஷ்டமில்லை.	கட்டடங்கள் சேதமாயின.
26—9—40. (வியாழக்கிழமை).			
	படையெடுக்க உபயோகப்படும்: துறை முகங்கள்.—இங்கிலீஷ் கால்வாயின் கிழக்குக்கரை[முக்கியமாக ஆஸ்டென்ட் (Ostend), கலே (Calais), புலாயின் (Boulogne), லாஹவேர் (La Havre)]	......	அநேக படகுகள் சேதமாயின; துறை முகங்கள் உபயோகப் படுத்தமுடியாமல் போய்விட்டன.
	ராணுவ முக்யத்வம்வாய்ந்த இடங்கள்.— கீல் (Kiel), கால்வாய், வடமேற்கு ஜெர்மனி (Germany).	......	படுசேதமாயிற்று.
	உள்நாட்டில் கால்வாய்கள்.—ஜெர்மனி (Germany).	......	தடைப்பட்டு விட்டன.
	தரையிலிருக்கும் விமானங்கள்.—ஸாலம் (Sollum).	......	4-விமானங்கள் சேதமாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
26—9—40. (வியாழக்கிழமை)—தொடர்ச்சி.			
	வேவு பார்த்தல்.—அபிஸீனியா (Abyssinia), இதாலி ஸோமாலிலாண்ட் (Somaliland).		
	அஸாப்.—(Assab).	நஷ்டமில்லை.	
27—9—40. (வெள்ளிக்கிழமை).			
	படையெடுக்க உபயோகிக்கப்படும் ஸ்தலங்கள்.—பிரஞ்சு (French), பெல்ஜியன் (Belgian) கடற்கரைகள்.		
	கப்பல் நிற்குமிடங்கள், மின்சார உற்பத்தி ஆலை, கப்பல்கள்.—லோரியண்ட் (Lorient).	......	தீஜ்வாலையும், வெடிச் சத்தமும் கிளம்பின.
	இரும்பு, அலுமினியம் தொழிற்சாலை—லாஹவேர் (La Havre).		
	ரயில் வண்டிகள் நிற்குமிடம்—மான்ஹீம் (Monheim), ஹாம் (Hamm).		
	வெடிமருந்து ஆலை—டஸ்ஸல்டார்ப்(Dusseldorf), லிபியாவி (Libya)லுள்ள ஜாராபப் (Zarabub) கோட்டை.	1 விமானம்.	வெடித்தது 1 விமானம், சில கட்டடங்கள் இடிந்தன.
	மோட்டார் வண்டிகள்—ஜாராபப்(Zarabub)புக் கருகே.		அநேகம் நாசமாயின.
28—9—40. (சனிக்கிழமை).			
	மேற்கில் இருக்கும் மின்சார உற்பத்தி ஆலை, ப்ரீட்ச்ஸ்பெல்டு மின்சார ஆலை, விமானஞ்சுடும் பீரங்கிகள்—பெர்லின் (Berlin).		பல இடங்களில் தீப்பிடித்தது, பல கட்டடங்கள் நாசமாயின.
	ஹிட்லர் (Hitler)ன் படையெடுப்பு ஸ்தலங்கள்—லாஹவேர் (La Havre), ஸிகாம்ப் (Secamp), புலாயின் (Boulogne), கலே (Calais), லோரியண்ட் (Lorient), டன்கர்க் (Dunkirk), இன்னும் அநேக இங்கிலீஷ் கால்வாயிலிருக்கும் துறைமுகங்கள்.		படுசேதத்திற் குள்ளாயின.

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
28—9—40. (சனிக்கிழமை)—தொடர்ச்சி.			
	பீரங்கிகள்—காப் கிரிஸ்னே (Cap Grisnez).		
	ரயில்வே ஜங்ஷன்கள்—ஹாம்பர்க் (Hamberg), ஸ்டென்டால் (Stendal).		சீர்குலைந்தது.
	ரயில் வண்டிகள் நிற்குமிடம்—மன்ஸ்டர் (Munster), ஹாம் (Hamm), ஸோயஸ்ட் (Soest).		தீப்பிடித்தது.
	கோலோன் (Cologne), லாஹவேர் (La Havre).		
	விமான நிலயங்கள்—மாக்டீபர்க் (Magdeburg), மண்டர் ஹான்டார்ப் (Mundter Handorf).		சேதமாயின.
	எண்ணெய்க்கிடங்கு—பிராங்பர்ட் (Frankfurt).		
	வெடிமருந்து ஆலை—ஹானு (Hanau)		வெடித்தது.
	சாமான் ஏற்றிச்செல்லும் மோட்டார்கள்—பார்டியாவு (Bardia)க் கருகில்.		
	சைன்யங்கள்—மாட்டலீனக் கோட்டை (Fort Maddelena).		
	மோட்டார் வண்டிகள்—ஸிடி பரானி (Sidi Barrani).		
	விமான நிலயங்கள்.—டெஸ்ஸி (Dessie), குர் (Gur)	......	......
	வேவு பார்த்தல்.—விரோதி நாடுகள்.	நஷ்டமில்லை.	......
29—9—40. (ஞாயிற்றுக்கிழமை).			
	ஜெர்மனி படையெடுக்க உபயோகப்படும் துறைமுகங்கள்.—இங்கிலீஷ் கால்வாயின் கிழக்குக் கடற்கரை.	......	குண்டு மாரி பொழிந்தது.
	பீரங்கிகள் வைத்திருக்கும் இடங்கள்.—காப்கிரினே (Cap Grisnez)	......	தகர்க்கப்பட்டன.
	கடல் கண்ணிகள் வைத்தல்.—விரோதிகளின் துறைமுகங்கள், நதி முகத்துவாரங்கள்.	......	......

தேதி.	பிரிடிஷ் விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	பிரிடிஷாரின் நஷ்டம்.	எதிரிகளின் நஷ்டமும், படையெடுப்பின் விளைவுகளும்.
29—9—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	இருப்புப்பாதைகள்.—எராங் (Ehrang), மான்ஹீம் (Monheim), ஸோயஸ்ட் (Soest), காப்லென்ஸ் (Coblenz) கொலோன் (Cologne), அஸ்னுப்ருக் (Osnabruck), ஹாம் (Hamm)	......	போக்கு வரத்து சாதனங்கள் சீர்குலைந்தன.
	எண்ணெய் ஆலை.-ஹானோவர் (Hanover)	......	......
	ஆலைகள்.—ஹானோவர் (Hanover), காமன் (Kamen).	......	தீப்பிடித்தன.
	பிரான்கோஹ்லன் (Braunkohlen)	......	தீப்பிடித்தது.
	எண்ணெய் சுத்திசெய்யும் ஆலை.—மாக்டீபர்க் (Magdererg).		
	கோல் காஸ்.—(Coal gas), ஆலை; பாஸ்க் (Bosch).	......	......
	தொழிற்சாலை.—ஸ்டட்கார்ட் (Stuttgart)	......	......
	அலுமினியம் ஆலை.—பிட்டர்பெல்டு (Bitterfeld).	......	......
	மின்சார உற்பத்தி ஆலை.—ஆண்ட்வர்ப் (Antwerp).	......	......
	பாக்கர் (Fokker) விமான உற்பத்தி சாலை.—ஆம்ஸ்டர்டாமுக் (Amsterdam) கருகில்.	......	கட்டடத்தின் மேல் குண்டு விழுந்தது.
	விமான நிலயங்கள்.–கிப்ஹார்ன் (Gifhorn), டெஸ்ஸா (Dessau), எவரி (Evere), ஆச்சர்ஸ்லெபன் (Aschersleben), ஷீபால் (Schipol), ஆம்ஸ்டர்டாம் (Amsterdam),	நஷ்டமில்லை.	சேதமாயின.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
24—9—40. (செவ்வாய்க்கிழமை).			
	காலையில்.—கேண்ட் (Kent) கடற்கரை, தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.		லண்டனை ஒன்றும் அணுகவில்லை; வீடுகளுக்கும், கட்டடங்களுக்கும் சேதம். சிலருக்குக்காயம்.
	பிற்பகலில்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், ஸவுதாம்டன் (Southampton) பிரதேசம்; பிரைடன் (Brighton).		வீடுகளுக்கு சொற்பச் சேதம்; சிலருக்குக் காயம்.
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம், இங்கிலாந்து (England), ஸ்காத்லாந்து (Scotland), வேல்ஸ் (Wales).	8 விமானங்கள்	தீப்பிடித்தது. சீக்கிரம் அணைக்கப்பட்டுவிட்டது. காயம் பட்டவர்கள் சொற்பந்தான். 4 விமானங்கள்; 2 விமானிகள் உயிர் தப்பினர்.
25—9—40. (புதன்கிழமை).			
	பகலில்.—லண்டன் பிரதேசம் (2 அபாய அறிவிப்புமட்டுந்தான்; படையெடுப்பு இல்லை). டார்ஸெட் (Dorset) கடற்கரை, பிரிஸ்டல் (Bristol), தென்கிழக்கு இங்கிலாந்து (England).		சொற்பசேதந்தான். சிலருக்குத்தான் காயம்.
	இரவில்.—லண்டன் London) பிரதேசம், வேல்ஸ் (Wales), வடமேற்கு இங்கிலாந்து, மிட்லண்ட்ஸ் (Midlands), தென்கிழக்கு இங்கிலாந்து (England).	26 விமானங்கள்.	லண்டனை அணுக முடியவில்லை; சேதம் சொற்பம். காயமும் சிலருக்குத்தான். 4 விமானங்கள்; 3 விமானிகள் பத்திரம்.
	மால்டா (Malta)	... 3 விமானங்கள்	

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
26—9—40. (வியாழக்கிழமை).			
	காலையில்.—தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், வடகிழக்கு கடற்கரையில் இரண்டு இடங்கள் (லண்டனருகே விமானங்கள் வரமுடியவில்லை—விமான அபாய எச்சரிக்கைகள்தான் இருந்தன).		சேதமில்லை. சிலருக்குக்காயம்.
	பிற்பகலில்.—பட்டணங்கள்—ஹேஸ்டிங்ஸி (Hastings)லிருந்து, ஸவுதாம்டன் (Southampton) வரையுள்ள அநேக பட்டணங்கள்.		சில வீடுகளுக்குச் சேதம். ஒருவருக்கும் பலத்தகாயம் இல்லை.
	வைட் (Wight) தீவு ...		
	இரவில்.—லண்டன் (London) பிரதேசம் (ஒரு ஒருவிமானம் அங்கங்கே பறந்து வந்தது).	......	தீப்பிடித்தது. ஆனால் உடனே அணைக்கப் பட்டுவிட்டது.
	மிட்லண்ட்ஸி (Midlands)ல் ஒரு பட்டணம்.	......	சிலருக்குக் காயம்.
	வடமேற்குப்பிரதேசத்தில் ஒருபட்டணம்.	34 விமானங்கள்.	8-விமானங்கள்; 3-விமானிகள் உயிர் தப்பினர்.
27—9—40. (வெள்ளிக்கிழமை)			
	காலையில்.—டார்ஸெட் (Dorset) கடற்கரை, பிரிஸ்டல் (Bristol, தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம், தென்கிழக்கு இங்கிலாந்தின் மற்றொருபாகம், கெண்ட் (Kent), எஸ்ஸெக்ஸ் (Essex).	......	சொற்பச்சேதம். காயப்பட்டவர்களும், கட்டடங்களின் சேதமும் மிகக்குறைவு.
	பிற்பகலில்.—லண்டன் (London) பிரதேசம், ரெட்ஹில் (Redhill), தேம்ஸ் (Thames) நதி முகத்துவாரம்.	......	லண்டனருகே ஒரு விமானம்கூட வரமுடியவில்லை. சேதம் சொற்பந்தான். சிலருக்குக் காயம்.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
27—9—40.	(வெள்ளிக்கிழமை)—தொடர்ச்சி.		
	இரவில்.—லண்டன் (London), மர்ஸிஸயிட் (Merseyside).	......	சில இடங்களில் தீப்பிடித்தது; ஆனால் சீக்கிரம் அணைக்கப்பட்டுவிட்டது.
	தெற்கு லங்காஷயர் (Lancashire), சில மிட்லண்ட்ஸ் (Midlands) பட்டணங்கள்.	133 விமானங்கள்.	34-விமானங்கள்; 17 விமானிகள் பத்திரம்.
	கென்யாவி (Kenya)லுள்ள பூனு (Buna).		
28—9—40.	(சனிக்கிழமை).		
	காலையில்.—தென்கிழக்குக் கடற்கரை, கிழக்கு இங்கிலாந்து (England).	......	சேதமேயில்லை.
	பிற்பகலில்.—போர்ட்ஸ்மத் (Portsmouth) பிரதேசம், கெண்ட் (Kent), ஸஸ்ஸெக்ஸ் (Sussex) கடற்கரைகள்.		
	இரவில்.—தென்கிழக்கு இங்கிலாந்து (England), மர்ஸிஸைட் (Merseyside), லண்டன் (London), சுற்றுப்புறங்களிலுள்ள ஹோம் கவுண்டீஸ் (Home Counties).	......	தீப்பிடித்தது; ஆனால் சீக்கிரம் அணைத்துவிட்டார்கள். சில கட்டடங்கள் இடிந்தன. சிலருக்குக் காயம்.
	கிழக்கு மிட்லண்ட்ஸி (Midlands)ல் சில பட்டணங்கள்.	6-விமானங்கள்.	7-விமானங்கள்.
	லூகா (Luqa) விமானநிலயம்.—மால்டா (Malta).		
29—9—40	(ஞாயிற்றுக்கிழமை).		
	காலையில்.—தெற்குக் கடற்கரை, தேம்ஸ் (Thames) பள்ளத்தாக்கு, ஹோம் கவுண்டீஸி (Home Counties)லுள்ள ஒரு கிராமம்.	......	சேதமேயில்லை ஒருவருக்கும் காயமில்லை.

தேதி.	எதிரி விமானப்படையெடுப்பின் விவரங்கள்.	எதிரிகளின் நஷ்டம்.	பிரிடிஷாரின் நஷ்டமும், அவற்றின் விளைவுகளும்.
29—9—40. (ஞாயிற்றுக்கிழமை)—தொடர்ச்சி.			
	பிற்பகலில்.—தென்கிழக்குக் கடற்கரை, கெண்ட் (Kent), மிட்லண்ட்ஸி (Midlands)லும், எடின் பரோவி(Edinburg)லுமுள்ள சில இடங்கள்.	......	சேதமில்லை.
	இரவில்.—ஹோம் கவுண்டீஸ் (Home Counties) மர்ஸிஸைட் (Merseyside), லண்டன் (London)பிரதேசம்.	...... 10 விமானங்கள்	4 விமானங்கள்; 2 விமானிகள் உயிர்தப்பினர்.
30—9—40. (திங்கட்கிழமை).			
	காலையில்—தென்கிழக்கு இங்கிலாந்து (England), பிரிஸ்டல் (Bristol) பிரதேசம், போர்ட்லண்ட் (Portland), ஹேஸ்டிங்ஸ் (Hastings), கெண்ட் (Kent).		சில இடங்களில் சொற்பசேதம் விளைந்தது.
	பிற்பகலில்.—கெண்ட்(Kent), ஸஸ்ஸெக்ஸ் (Sussex), டார்ஸெட் (Dorset) கடற்கரைகள்.		கட்டடங்கள் இடிந்தன.
	பட்டணங்கள்.—டார்ஸெட் (Dorset), தேம்ஸ் (Thames) நதி பள்ளத்தாக்கு, ஸப்போக் (Suffolk).		சிலருக்குக் காயம்.
	மாலையில்.—லிவர்பூல் (Liverpool) தென்மேற்கு வேல்ஸ் (Wales).		விரட்டியடிக்கப்பட்டன.
	இரவில்.—லண்டன் (London) சுற்றுப்புறங்கள், மர்ஸிஸைட் (Merseyside), ஹோம் கவுண்டீஸி (Home Counties)லும், தென்கிழக்கு இங்கிலாந்திலும் உள்ள சில பட்டணங்கள்.	47 விமானங்கள்.	தீப்பிடித்தது; ஆனால் சீக்கிரம் அணைக்கப்பட்டு விட்டது. 22 விமானங்கள் 12 விமானிகள் உயிர்தப்பினர்.

அனுபந்தம் 1.

"மேலொளிகள்"

இந்தப் பகுதிக்கு இதுவரை "பக்க ஒளிகள்" என்று பெயரிட்டிருந்தோம். இப்பொழுது முக்கியமாய் காக்ஷிகளை மேலேயிருந்து நோக்குகிறோமாகையால் இன்று அதன் பெயரை "மேலொளிகள்" என்று மாற்றுகிறோம்.

* * * *

ஆகாயத்தில் நடக்கும் அந்த மகத்தான யுத்தம்—பிரிடனின் போர்—இன்னும் நடந்துகொண்டிருக்கிறது. வீடுகள் இடிந்து விழுகின்றன—குற்றமற்ற ஜனங்கள் ஆபாலவிருத்தர் இருபாலரும் நூற்றுக்கணக்காய் மடிகிறார்கள். கோயபெல்ஸ் ஒலி பெருக்கியின் எதிரே நின்று "லண்டன் முழுமையும் நாசமாக்கப்பட்டுக் கிடக்கிறது" என்று அலறுகிறான். ஆனால் யாருக்கு பிரயோஜனம்? சர்வ நிச்சயமாய் ஜெர்மானியர்களுக்கல்ல.

தொண்ணூறுகோடி ரூபாய் பெறுமதியுள்ள ஆகாயக் கப்பல்கள் இழக்கப்பட்டன. தேர்ச்சியடைந்த ஆகாய விமானிகள் ஏராளமானவர்களையும் இழந்தாய் விட்டது. அவர்களுக்கு பதிலிகள் நியமிப்பதும் ஜெர்மனிக்கு முடியாத காரியம்.

படையெடுப்பு—அது ஒரு ஸ்வப்நம்—அந்த லக்ஷ்யங்களை தியானித்தல்—ஆங்கில ஆகாயக் கப்பல் படையின் கூர்மையான கண்பார்வைக்கும் வெடிகுண்டு மழைக்கும் மத்தியில் இங்கிலாந்தில் வந்து இறங்க யுத்த தந்திரங்கள்—இவைகள் ஜெர்மனியர்களுக்குப் பிடிக்கவில்லை. இவைகளில் ஈடுபடுவதைக் காட்டிலும் கலகக்காரர்களின் "கான்ஸெண்ட்ரேஷன் காம்பு" என்று சொல்லப்படும் ஜெயில்கள் மேலல்லவா என்று ஜெர்மானியர்கள் நினைக்கிறார்கள். ஜெர்மனியில் ஜனங்களுக்கு தினே தினே விருத்தியாகி வரும் ஏமாற்றம். அந்த ஏமாற்றத்தை மறைக்கவோ, குறைக்கவோ முதல்தரமான புளுகணியின் சாமார்த்தியமும் உபயோகப்படவில்லை.

* * * *

ப்ளீட்ஸ்கிரேக்—முதல் அம்சம் :—

ஆகாய விமான நிலயங்களையும், தொழிற்சாலைகளையும், துறைமுகங்களையும் எதிர்ப்பதால் பிரிடனின் ஆகாயப் படையையும், கடல் படையையும் நாசம்செய்ய முயற்சி.

பயன் :—

இங்கிலாந்தின் உணவுப் பொருள்களுக்கு ஏற்பட்டிருக்கும் சேதத்தால் தலை ஒன்றுக்கு ஒரு வேளை ஆகாரம்தான் குறையும் என்று ஊல்டன் பிரபு தெளிவாய்ச் சொல்லுகிறார்.

ஒரு ஆகாய விமான நிலயமும் உபயோகத்துக்கு லாயக்கற்றதாகப் போக வில்லையென்று ஆகாய இலாகா மந்திரியும் கணக்காய்ச் சொல்லுகிறார். எதிரிகள் துறைமுகங்களை தீவிரமாக தாக்கியும் பிரிடனின் மாதாந்திரக் கப்பல் சேதம் 20,000 டன்களுக்கு மேல் குறைந்துவிட்டது.

ப்ளீட்ஸ்கிரேக்—இரண்டாவது அம்சம் :—

ஸிவிலியன் ஜனங்களை பயமுறுத்தவும் பொதுஜன இலாகாக்களையும், அரசாங்க மத்தியஸ்தாபனங்களையும் நாசம் செய்யவும் முயற்சிகள்.

பயன் :—

பிரிடிஷ் பொதுஜனங்கள் தங்கள் யுத்த முயற்சிகளுக்கு எவ்வித அப்யந்தரமும் இல்லாமல் குகைவாசம் செய்ய முற்பட்டு விட்டார்கள்.

அவர்கள் கொஞ்சம்கூட பயப்படவில்லை. மத்யஸ்த நாடுகளில் உள்ள ரிபோர்ட்டர்கள் சொல்லும் பிரகாரம் அவர்கள் குதூகலமாகத் திரிகிறார்கள். ஜெர்மனி இந்தமாதிரியான பயனை விரும்பவில்லை.

ரிப்பன்ட்ராப் ஐரோப்பாவில் ஜெர்மானியர்களுக்குச் சொந்தமான பாகங்களில் கூட பீரங்கிகளுடன் கூடிய ரயில் வண்டியில் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கிறது. ஹிட்லர், பர்லினிலேயே பீரங்கிகள் சகிதமான இரட்டைப் பாதுகாப்புடன் சஞ்சரிக்க வேண்டியிருக்கிறது. மாகூழிமை தங்கிய நமது அரசரோ சத்ருக்களால் அடிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களில் கவலையில்லாமல் உலவுகிறார். வீடுகளை இழந்தவர்களும், கஷ்டத்தை அடைந்தவர்களும் அவரை முதுகில் தட்டிக்கொடுக்கிறார்கள்.

ப்ளீட்ஸ்கிரேக்—மூன்றாவது—அம்சம் :—

படையெடுப்பு!

பயன் :— ? ? ?

நஷ்டமோ ?—லண்டன் 693 சதுரமைல் உள்ளது. கட்டடங்கள் நிரம்பியது. டில்லி மாகாணம் முழுவதையும்விடப் பெரியது. அதன் ஜனத்தொகையோ 8,000,000. அதை அடியோடு தவிரவிடுவதென்றால் கஷ்டம்தான்!

ஆனால் கூலிக்காரர்களின் வீடுகளின் தொகுதியும், புடவைக் கடைகளும், மாதாக்கோவில்களும், ஆஸ்பத்திரிகளும், பக்கிங்ஹாம் பாலெஸ் என்ற அரண்மனையும் யுத்தலக்ஷயங்களாகமாட்டா. மிகுந்த உயரங்களிலிருந்துகொண்டு வெடி குண்டுகளைப் போட்டு விவஸ்தையில்லாமல் கொல்வது யுத்தகாலத்தில் கூட அக்ரமம்தான்; இந்நிலைமையில் பிரிடிஷார் இப்பொழுது நடக்கும் கலப்பற்ற படுகொலையை ஒரு நாளும் மறக்கமாட்டார்கள்.

தங்கள் ஆகாயப் படையின் முழுபலத்தையும் பிரிடன்மேல் பிரயோகித்திருப்பதாக ஜெர்மானியர்கள் தங்கள் ஊர்களில் ப்ராட்காஸ்ட் செய்துவருகிறார்கள், அது உண்மையாயிருக்குமானால் தன் சண்டைப் படையைப்பற்றி ஹிட்லர் பெருமிதம் கொண்டிருக்கிறார் என்று தோன்றுகிறது. அந்த மகத்தான யுத்தத்தின் கடைசி வாரத்தில் (அதாவது 28-வ 133 கப்பல்கள் வீழ்த்தப்பட்டன என்றது வரை) வீழ்த்தப்பட்ட "ஹன்" மிஷின்களின் தொகை சுருங்கிவிட்டது. அதேபோல், இன்னும் அதிகமாகவே, பிரிடிஷாரின் மரணத் தொகையும் சேதக் கணக்கும் குறைந்துவிட்டது.

காரணம்? "புதிய பாரேஜ்"! (புதிய தடை).

உண்மை என்னவென்றால் ஜெர்மன் ஆகாயக் கப்பல்கள் (ரெய்டர்கள்) பெருங் கூட்டமாக வந்தாலும் சரி, சிறு சிறு கூட்டங்களாக வந்தாலும் சரி அவைகளின் லக்ஷ்யங்களை அடையமுடியவில்லை. ரவைகள் நிறைந்த வெடி குண்டுகளின் பாதுகாப்புக்கு மத்தியில் பறப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை. அது மனதைக் கலக்குகிறது.

அந்தப் பாதுகாப்பு அடியில் வருமாறு செய்யப்பட்டு வருகிறது:—ஸர்ச்லைட்டுகள் அணைக்கப்படுகின்றன. ஒரு வரிசை பீரங்கிகள் 20,000 அடி தூரத்தில் ஒரே வரிசையில் வெடிக்கும்படி சுடப்படுகின்றன. அடுத்த வரிசை பீரங்கிகள் 19,000 அடி தூரத்திலும், அதற்கடுத்தவரிசை 18,000 அடி தூரத்திலும் இன்னும் அதே போல் வரிசையாக வெடிக்கின்றன. இதன் பயன் என்ன?—ஜெர்மானியருக்கு கப்பல்களை செலுத்த வெளிச்சம் கிடையாது. கனல்வீசி வெடிக்கும் குண்டுகளாலான திரையை தாண்டி செல்லவேண்டும். அதிலிருந்து தப்பமுயன்றால் புகைக் கூண்டு தடையாகிற வலைகளில் விழவேண்டும்.

* * * *

நம்முடைய பாதுகாப்பே ஜெர்மானியர்களுக்குப் பிடிக்கவில்லையென்றால் நம்முடைய எதிர்ப்பைக் கண்டு அவர்கள் நடுங்கவேண்டியதுதானே.

ஜெர்மானியர்களுக்கு பதிலுக்குப்பதில் செய்வதில் நம்முடைய சக்தியை நாம் வீணாக்குகிறதில்லை. வடக்கு சமுத்திரக் கரைகளிலிருந்து போலந்தில் கடாசி எல்லைவரையில் நூற்றுக்கணக்கான மர்மஸ்தானங்களில் திரும்பத் திரும்ப அடித்து வருகிறோம்.

ஒவ்வொரு வாரமும் நாம் வெளியிடும் ஆகாயச் சண்டையின் சுருக்கங்களைப் படியுங்கள்—சுமாராகச் சொன்னால் நம்முடைய வெடிகுண்டு விமானங்கள் ஜெர்மானியர்களுடையதிகளைவிட மூன்றுபங்கு தூரம் பரந்து செல்லவேண்டி இருக்கிறது—மிலானுக்கும், டியூரினுக்கும் போய் திரும்பவோ அல்லது பெர்லின், அல்லது போலிட்ஸ் முதலிய இடங்களுக்குப் போய்த்திரும்பவோ சுமார் 600 மைல்களுக்குமேல் பறந்து செல்லவேண்டி இருக்கிறது. இதெல்லாம் நம்முடைய ஆகாயக்கப்பல்களின் பராக்கிரமத்தை வெளிப்படுத்தச் செய்துவரும் வெறும்

வேடிக்கைகள் அல்ல. ஆனல் நாளுக்கு நாள் அதிகமான ஆட்களுடனும், வெடி குண்டு சுமைகளுடனும், சென்று ஒவ்வொரு தடவையும் லக்ஷ்யங்களை நேராடி அடிப்பது என்றது நித்ய தர்மமாகிவிட்டது. பிரெஞ்சு கடற்கரையில் ஒவ்வொரு இரவும் நடக்கும் வாணவேடிக்கைகளைக் கண்டு நடுநிலைமையிலிருக்கும் தேசங்களும் பயப்படுகின்றன. ஹாம்பர்க் துறைமுகத்தில் பாதிதான் மிகுந்திருக்கிறது. இவைகளை நீங்கள் அறிந்துகொள்வீர்களேயானல், நாம் எதிர்க்க ஆரம்பித்தால் ஜெர்மானியர்களுக்கு எவ்வளவு கோரமான பிரதிபலன் கிடைக்கும் என்பதை ஒருவாறு உணர்வீர்கள்.

அட்மிரல் ஹார்த்தியிடமிருந்து ப்யூரருக்குக் கடிதம் கொண்டுபோன ஹங்கேரி தேசத்துத் தூதனை எவ்வாறு ஜெர்மானியர்கள் நடத்தினர்கள் என்றதைப் பார்க்க நமக்கு அடியில் சொல்லப்படும் கதை ஞாபகம் வருகிறது. இந்தக் கதை பழைய கதையானலும் பாதகமில்லை.

கொஞ்ச நாட்களுக்குமுன் ஹங்கேரி ரீஜண்டுடன் நேரில் கண்டுபேச ஒத்துக் கொண்டபோது ஹிட்லர் சிநேகிதர்கள் போல தமாஷான முறையில் பேச ஆரம்பித்தார். "தோழரே, உங்கள் ஊரில் கப்பல் படையே இல்லாதபோது, உமக்கு எப்படி அட்மிரல் ஹார்த்தி என்று பெயர் வந்தது?" என்று கேட்டார். அதற்கு ஹார்த்தி "ஏன்? உங்கள் ஊரிலும் நியாய இலாகா மந்திரி ஒருவர் இருக்கிறரல்லவா?" என்றராம்.

* * * *

அனுபந்தம் II.

50 விமான எதிர்ப்புகளுக்குப்பின்.

பிரிடிஷ் கடற்படைத் துறைமுகம் ஒன்றின் நிலைமை.

(சிகாகோ டெய்லி நியூஸ் லண்டன் நிருபரான ஹெலன் பி. கர்க்பாட்ரிக் எழுதியது.)

இழ்க்கண்ட விவரங்கள் சண்டைக் கப்பல்கள் தங்கும் முக்கியமான பிரிடிஷ் துறைமுகமொன்றைக் குறிப்பிடுகின்றன. இதை ஜெர்மானியர்கள் 50 தடவை விமானங்களால் எதிர்த்தாய்விட்டது. ஆனல் இதற்குப் பழுது ஒன்றும் ஆகவில்லை. இம்மாதிரி எதிர்ப்புகளைப் பிரிடன் இன்னும் 100 வருஷங்கள் வேண்டுமானலும் தாங்கிக்கொள்ளும்.

அடியோடு தாங்கள் தகர்த்துவிட்டதாக ஜெர்மானியர்கள் சொல்லிக் கொள்ளும் துறைமுகங்களில் இது ஒன்று. அடியோடு நாசமாய்விட்டதாகச் சொல்லாவிட்டாலும், பலமாய் எதிர்க்கப்பட்டதாக இதைப்பற்றி லண்டனிலும் வதந்திகள் கிளம்பின.

இந்தத் துறைமுகத்தை நான் முற்றும் சுற்றிப்பார்த்தேன்; அங்கு ஏற்பட்டு இருக்கும் சேதமெல்லாம் எனக்கு நன்ருய்த் தெரியும். 50 எதிர்ப்புகளில் 5 எதிர்ப்புகளில்தான் குண்டுகள் துறைமுகத்திலாவது, பக்கத்திலுள்ள ஊரிலாவது விழுந்தன. இங்கு பலூன்கள் (காற்றுப்-பைகள்), ஆகாயத்தில் பறந்துகொண்டிருப்பதிலிருந்தும், சிப்பாய்கள் நடமாடுவதிலிருந்தும், தொழிற் சாலைகளில் பலமாய் வேலை நடப்பதிலிருந்தும், ஏதோ யுத்தம் நடந்துகொண் டிருப்பதாகச் சொல்லலாமே ஒழிய, இந்தத் துறைமுகத்தைப் படையெடுத்த சின்னங்கள் ஒன்றையும் காணேம்.

ஒன்றைத்தவிர, மற்ற குண்டுகளெல்லாம் வாசஸ்தலங்களில்தான் விழுந்தன. இதனுல் 600 வீடுகள் சிறிது பழுதாயிருக்கின்றன. இவைகளில் 3 வீடுகள் குண்டுகள் நேரே விழுந்ததால், இடிந்துபோய், கல்லும், செங்கலுமாய்க் கிடக் கின்றன. மற்ற வீடுகளில் ஜன்னல்கள் உடைந்தும், கூரைகள் பிரிந்தும் சிறிது பழுதுபட்டிருக்கின்றன. ஊர் அதிகாரிகள் மூலமாய் வீட்டு ஸ்வாந்தார்கள் கொடுத்திருக்கும் கணக்குப்படி 600 வீடுகள் சேதம். இந்தத் தொகை பரிசோதிக் கப்பட்டு வருகிறது. முடிவில் மொத்தத் தொகை 600-க்குக் குறையும்போலிருக் கிறது.

இந்த 50 படையெடுப்புகளில் இறந்தவர்கள் 19 பேர்கள்தான். காயப்பட்ட வர்கள் இதிலும் பாதி. இவர்கள் ஒருவர்கூட ராணுவஸ்தரல்ல. சண்டைக் கப்பல் ஒன்றின் சமீபத்தில் விழுந்த வெடிகளில் ஒன்று ஒரு அப்பிள் செடியிலும், மற்ருென்று புட்-பால் விளையாடுமிடத்திலும் விழுந்தன. கப்பல் நிலயத்துக்குக் கால் மைல் தூரத்துக்குள்ளாக ஒரு குண்டாவது விழவில்லை.

இந்தத் துறைமுகத்தில் 18,000 வேலைக்காரர், பிரிடன், போலண்டு, நார்வே, ஹாலண்டு, பிரான்ஸ் கப்பல்களை இரவு பகலாய்ப் பழுது பார்த்துக்கொண்டு வேலை செய்துகொண்டிருக்கிருர்கள். சமீபத்தில் நடந்த கடற்சண்டை ஒன்றில் ஒரு பெயர்போன பிரிடிஷ் கப்பல் பழுதுபட்டது. ஆனுலும் வேறு கப்பல்களின் உதவியன்னியில், தானுகவே, இது, இந்தத் துறைமுகத்துக்கு வந்து சேர்ந்தது. இப்பொழுது இது பூராவும் பழுதுபார்த்தாய்விட்டது. சண்டையில் இந்தக் கப்பலின் புகைப் போக்கிக் குழாய்கள் பன்னடைபோல் துளைக்கப்பட்டுப்போய் விட்டன. இதை, ஞாபகத்துக்காக, பத்திரப்படுத்தி வைத்திருக்கிருர்கள்.

விமான எதிர்ப்புகள் இனிமேல் பலப்படுமோ வென்ற பயம் இந்த ஊரார் களுக்காவது துறைமுக அதிகாரிகளுக்காவது இருப்பதாகக் காணேம். ஜெர்மன் விமானிகள் இந்த இடத்திற்கு வர பயப்படுகிருர்களென்று ஊரார்களுக்குத் தெரிகிறது. அங்கு வைத்திருக்கும் தற்காப்பு ஏற்பாடுகளும் அவ்விதமே பலமா யிருக்கின்றன. அமெரிக்காவிலிருக்கும் நியூபோர்ட் துறைமுகத்தில் எவ்வளவு நிர்ப்பயமாய் கப்பல்கள் வந்துபோய்க் கொண்டிருக்கின்றனவோ, அதே மாதிரி இந்த பிரிடிஷ் துறைமுகத்திலும் எல்லாவித யுத்தக் கப்பல்களும் நிர்ப்பயமாய் வந்துபோய்கொண்டிருக்கின்றன.

அனுபந்தம் III.

ஜெர்மன்-இதாலிய ஒலிபரப்புப் பொய்கள்.

A—ஆங்கிலத்தில் ஒலிபரப்பு.

10—9—40.

இதாலியும், ஜெர்மனியும் வாய் கொள்ளாத பொய்யைச் சொல்லிக்கொண்டு இருக்கின்றன. இதாலி-விமானங்கள் எதிர்க்கும் ஒவ்வொரு சமயத்திலும் பிரிடிஷ் போர் நிலயங்களும், யுத்தக்கப்பல்களும் அதிகப் பழுதாய்ப்போகின்றனவாம். இதையொட்டி ஜெர்மனியும் மூன்று தினங்களாக பொய்ப்பிரசுரம்செய்து வருகிறது. மேலும், மத்தியதரைக்கடலிலும், செங்கடலிலும் பிரிடிஷ் துணைக் கப்பல்கள் சகிதம் செல்லும் கப்பல்களை, இதாலியக் கப்பல்கள் பலமாய்ச் சேதப்படுத்தி விட்டதாகவும் பிரஸ்தாபிக்கிறது.

இவர்கள் சொல்லுகிறபடி, சென்ற வாரத்தில் ஒரு கப்பல்கூடப் பழுதாகவில்லை. ஸெப்டம்பர் 8-ம் தேதியன்று பெரிய பிரிடிஷ் சைன்யமொன்று கைரோவில், கப்பல்களில் வந்து இறங்கியது. 1939 ஸெப்டம்பர் முதல் தேதியிலிருந்து, 1940 ஆகஸ்டுக்குள்ளாக 71 கப்பல்கள் துருப்புக்களையும், துருப்பு சாமான்களையும் ஏற்றிக்கொண்டு இந்தியாவிலிருந்து நடு-நாடுகளுக்குப் போயிருக்கின்றன. இவைகளில் ஒரு கப்பல்கூட எதிர்க்கப்படவில்லை; ஒரு ஆள்கூட சேதமாகவில்லை. பிரிடிஷ் ஸோமாலிலாந்தைப் பிடித்தது முதற்கொண்டு செங்கடலானது தன் ஸ்வாதீனத்துக்கு வந்து விட்டதாக இதாலி சொல்லிக் கொள்ளுகிறது. ஆனால், இது நடந்த பிறகு இரண்டு பெரிய பிரிடிஷ் பட்டாளங்கள், எதிர்க்கப்படாமல், இந்தக்கடல் மார்க்கமாய்ப் போயிருக்கின்றன.

11—9—40.

நடு-நிலை நாடுகளோடு இதாலி பலத்த வியாபாரம் செய்துகொண்டிருந்ததாகவும், அதற்கு ஜெர்மனியோடு செய்யும் வியாபாரமே அத்தாக்ஷியென்றும் இதாலி ஒலிபரப்புகிறது. நடுநிலையென்று பாசாங்கு செய்துகொண்டு இதாலி ஜெர்மனியோடு யுத்தமாரம்பித்த காலத்தில் செய்துவந்த கள்ள வியாபாரமெல்லாம் இப்பொழுது இதிலிருந்து வெளியாகிறது.

லண்டன் நகரத்தில், கண்மூடித்தனமாய் கண்ட இடங்களிலெல்லாம் ஜெர்மன் விமானிகள் குண்டுகளைப்போட்டு வீணாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இது கூடாது என்று ஜெர்மன் அறிக்கையொன்று எச்சரித்தது. அன்று இரவே, லண்டன் அதிகாரிகள் சோதனை தீபங்களையெல்லாம் அணைத்து விட்டார்கள்; இதிலிருந்து எதிரியின் குண்டுகள் முன்னிலும் அதிகமாய்ச் சேதமாயின. புதிய ஒரு யந்திரத்தால் விமானங்கள் வரவும் தெரிந்து கொள்ளப்பட்டது. நில-பீரங்கிகளும் எதிர்த்தன. விமானங்கள் கணக்கில்லாது சேதமாயின.

12—9—40.

“விமான-எதிர்ப்பை எத்தனை நாள்தான் இனி பிரிடன் தாங்க முடியும்?” என்று ஜெர்மன் ஒலிபரப்பு ஒன்று கேட்கிறது.

இதற்கு பதில் வாரன் இர்வின் என்ற அமெரிக்க நிருபர் ஸெப்டம்பர் 16-ல் கொடுத்திருக்கிறார்: அதாவது:—

"பிரிடனுக்கு இனித்தாங்க முடியாதென்று இதற்கு பதில்சொல்ல வேண்டுமாம். ஜெர்மானியர் பிறரை ஏய்த்துப் பொய் சொல்லச் சொல்லுவதில் ஸமர்த்தர்கள். என்னை 8 மாதங்களாக, பொய்ப்பிரசாரம் செய்யச் சொன்னார்கள். நான் அதற்கு இணங்காததிலிருந்து என்னை ஜெர்மனிக்குள் வரக்கூடாதென்று சொல்லி விட்டார்கள். நான் இங்கிலாந்தை நேரில் பார்த்தேன். விமான-எதிர்ப்புகளால் இங்கிலாந்து சோர்வு அடையவேயில்லை; ஒரு நாளுமடையாது. எத்தனை நாள் வேண்டுமானாலும் தாங்கிக்கொள்ளும். இந்த சக்தி அதற்கு இருக்கிறது. இந்த எதிர்ப்பின் பலனாக ஜனங்களின் தைர்யமதிகமாய்க்கொண்டுவருகிறது."

சமீபத்தில் மிஸ்டர் சர்ச்சில் செய்த பிரசங்கமொன்றை பிரான்ஸ் தோல்வியடையுமுன் ரெய்னாட் அமெரிக்காவுக்குச் செய்துகொண்ட கோரிக்கை ஒன்றோடு ஒப்பிட்டு, அதிலிருந்து, பிரிடனுடைய ஸ்திதி இப்பொழுது பிரான்ஸை ஒத்திருப்பதாயும், லண்டனை, ஆகவே விரைவில் பிடித்து விடலாமென்றும் ஜெர்மன் செய்தி ஒன்று சொல்லுகிறது.

ரெய்னாட் செய்துகொண்ட கோரிக்கைக்கும், சர்ச்சில் செய்த பிரஸங்கத்துக்கும் சம்பந்தமேயில்லை. முதலாவதாக, சர்ச்சில் அமெரிக்காவுக்கு கோரிக்கை ஒன்றும் செய்துகொள்ளவில்லை. இரண்டாவது பிரான்ஸைப்போல், பிரிடன் படையெடுக்கப்படவுமில்லை; ஜெயிக்கப்படவுமில்லை. மூன்றாவது பிரெஞ்சுத் தலைவர்களைப்போல் பிரிடிஷ் தலைவர்கள் மனம் தளரவுமில்லை. வெற்றி பெற்றபிறகு, உலகத்தை சீர்திருத்தி, மானிட ஸ்வதந்திரத்தையும், கௌரவத்தையும் உலகத்தில் நிலைநாட்ட யோசனை செய்யும்போது பிரிடன் அமெரிக்காவைக்கலந்து கொள்ளுமென்று சர்ச்சில் தன் பிரஸங்கத்தில் சொன்னார். ஆனால், ஜூன் 13-ல் செய்த கோரிக்கையில் ரெய்னாட், "பிரான்ஸ் முழுகிப் போய்விடப்போகிறது; பாவிகளான ஜெர்மானியர்கள் ஐரோப்பாக் கண்டத்தை ஆக்ரமித்துக் கொண்டு விட்டார்கள். ஆயிரக்கணக்கான விமானங்களை அமெரிக்கா அனுப்பி மேகக் கூட்டங்கள்போல் அவைகள் வந்து பிரான்ஸைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். ரெய்னாடின் விண்ணப்பத்துக்கும், சர்ச்சில் பிரஸங்கத்துக்கும் என்ன சம்பந்தம்?

13—9—40.

பிரிடிஷ்-விமானங்களின் பராக்ரமத்தை வெறுப்பதா, மறுப்பதாவென்று ஜெர்மனிக்கு இன்னும் புரியவில்லைபோலும். 'லண்டன் தொழிற்சாலைகளெல்லாம் நாசமாக்கப்பட்டுவிட்டன. இதைத்தடுக்க முடியாத பிரிடிஷ் விமானங்களைப் பற்றி என்ன ஸ்தோத்திரம் வேண்டியிருக்கிறது?' என்று, ஒருசமயம் சொல்லிக் கொள்ளுகிறது. மற்றொரு சமயம், பழிக்குப்பழி வாங்குவதற்காகவே, வேண்டுமென்றே ஜெர்மனியிலுள்ள கல்வி-கலை-நிலயங்களை பிரிடிஷ் விமானங்கள் வந்து தகர்க்கின்றனவென்றும், சொல்லிக்கொள்ளுகிறது. ஜெர்மனி தப்பிலுமடிக்கும்,

தவுலிலுமடிக்கும். பெர்லினை எதிர்த்ததற்குப்பதிலாக லண்டனை எதிர்ப்பதாக ஜெர்மனி சொல்லுவது புத்திஹீனம்; பிரிடிஷ் விமான எதிர்ப்பால் ஜெர்மனிக்கு ஒரு சேதமும் ஏற்படவில்லையென்று சொல்லிக்கொள்ளுவது அதற்கும் கேவலம். இது ஸான் டீகோ யூனியனைப்போன்ற நடுநிலை நாட்டுப் பத்திரிகைகளின் அபிப்பிராயம்.

14—9—40.

சக்கரவர்த்தியின் வாஸஸ்தலமாகிய 'பக்கிஙகாம்' அரண்மனையை ஜெர்மானியர்கள் எதிர்த்தார்கள். அதைப்பற்றி இப்பொழுதும் பிரசாரமும் நடக்கிறது. சக்கரவர்த்தியின் குடும்பத்தையும், கவர்ன்மெண்டு அதிகாரிகளையும் லண்டனை விட்டு வெளிப்படுத்துவதே இந்த விமானப்போரின் நோக்கம் என்றும், இதைச் செய்து முடித்து விட்டால் பெரிய ஜெயம்கிடைத்து விடுமென்றும் ஹாம் பர்கர் பிளாட் என்ற ஜெர்மன் பத்திரிகை சொல்லிக்கொள்ளுகிறது.

இது நடக்காது. ஆசைக்குத் தகுந்தபடி மனக்கோட்டை கட்டுகிறோம். ஆனால் இந்த எண்ணம் பலிக்காது.

பெல்ஜியத்தில் காபிகொட்டைக்குப் பதிலாக ஊரவைத்த வாற்கோதுமை உபயோகப்படுத்தப்படுகிறது. இதையும், வெண்ணெயையும் நாட்டார்களுக்கு இல்லாது ஜெர்மன் சைன்யங்களுக்காகக் கொள்ளையடித்துக் கொண்டுபோய் விடுகிறார்கள். நாட்டார்களே, சம்மதித்து, நேசபாவத்தோடு, ஜெர்மன் சைன்ய இலாகாவுக்கு இந்த மாதிரி உதவி செய்வதாகச் சொல்லப்படுகிறது. உண்மையில் சிநேகமுமில்லை: உதவி செய்யவுமில்லை. இதற்கு எதிரிடையாகவே, பெல்ஜிய நகரவாசிகள் ஜெர்மன் சைன்யத்துக்கு இடைஞ்சல் செய்யவென்றே, தந்தி, டெலிபோன் யந்திரங்களை ரகஸியமாய்ப்பழுதாக்கி விடுகிறார்கள். இந்தக் குற்றத்தைச்செய்பவர்களுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்படுமென்றும் ஜூலை 8-ல் ஜெர்மன் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

15—9—40.

கோலராடோ (Colorado) வண்டு என்று ஒரு பூச்சி. இதனால் உருளைக் கிழங்குப் பயிர்களுக்கு நாசமதிகம். இந்த வண்டுகள் அமெரிகாவிலிருந்து எப்படியோ வந்து பெல்ஜியம், பிரான்ஸ், ஜெர்மனி முதலிய தேசங்களில் பரவி இருப்பதாக ஜூலை 23-ல் ஜெர்மனியே ஒலிப்பரப்பிற்று. மேலும், இப் பூச்சிகளை அழிக்கும் முறைகளைப் பற்றிய விவரங்கள் ஒலிபரப்பப்பட்டிருக்கின்றன. இப்பொழுது, அதாவது, இரண்டு தினங்களாய் ஜெர்மனி, லக்ஸம்பர்க், பெல்ஜியம் முதலிய இடங்களில், விமானங்களில் பைகளில் அடைத்துக்கொண்டு வந்து, இந்தப் பூச்சிகளை பிரிடிஷார் பரவ விடுவதாக பிரஸ்தாபம் செய்கிறார்கள். இது பேத்தலிலும் பேத்தல்.

'ஜிப்ரால்டரிலிருந்து மால்டா, அலெக்ஸாண்டிரியா வரையில், அதாவது, மத்தியதரைக்கடல் முழுவதிலும், கடற் சண்டை செய்யும் கட்டாயம் பிரிடனுக்கு

இப்பொழுது ஏற்பட்டு விட்டது. இந்த ஏராளமான கடற்-போர்முனை முழுவதிலும் போர் செய்யவேண்டிய கஷ்டநிலை பிரிடனுக்கு வந்து விட்டது' என்று இதாலி ஒலிபரப்புகிறது.

இதிலிருந்து ஒன்று வெளியாகிறது. இதாலி சைன்யங்கள் எகிப்த் பார்சத்தில் இருந்தாலும் பிரிடிஷ் கடற்படைக்கு ஆதிபத்தியம் குறையவில்லையென்றும், உபத்திரவமுமில்லையென்றும் இதாலியே ஒப்புக்கொண்டுவிட்டது. வாஸ்தவத்தில், யுத்தாரம்பம் முதற்கொண்டு மத்தியதரைக் கடல் முழுபாகத்திலும் பிரிடன் ஆதிக்யம் குறையவேயில்லை. இதாலி-கப்பற்படையோடு நேர்ப்போர் செய்யவும் பிரிடன் தயாராயிருக்கிறது. ஆனால் சண்டைசெய்ய பயந்துகொண்டு இதாலியக் கப்பல்கள் ஒளிந்து கொள்ளுகின்றன. சமீபத்தில் ஒரு பிரமேயம் வாய்த்தது. அப்பொழுது இஜீயன் கடலில் நடந்த கப்பற் சண்டையில் இதாலி பலமாய் தாக்கப்பட்டது. இதிலிருந்து மத்தியதரைக்கடல் தலைமை வந்து விட்டதாக இதாலி சொல்லிக்கொள்ளுவதை நிறுத்தி விட்டது.

பக்கிங்காம்-அரண்மனை எதிர்ப்பு சம்பந்தமாய் இன்று சில அபாண்டப் புளுகுகள் வந்திருக்கின்றன. அரண்மனைக்கு அருகாமையிலிருந்த எண்ணெய் டாங்க் மேல் போட்டவெடி, தவறிப்போய் அரண்மனையில் விழுந்து விட்டதென்று இதாலி ஒலிபரப்புகிறது. இது பொய். அரண்மனையிலிருந்து, எண்ணெய் டாங்க் வெகுதூரத்திலிருக்கிறது.

பிரிடிஷ் பிரதம மந்திரி மிஸ்டர் சர்ச்சிலே அரண்மனையில் வெடிகளை வைத்து விட்டதாக மற்றொரு அபாண்டப்புளுகை ஜெர்மனி இப்பொழுது கட்டி விட்டிருக்கிறது. இது விந்தையினும் விந்தை !!

B—ஆசியா பாஷைகளில் ஒலிபரப்பு.

11—9—40.

"ஜெர்மன் எதிர்ப்பால் லண்டன் நகரமுழுவதும் பாழாய்ப் போய்விட்டது; இதிலிருந்து ஜெர்மன் விமானிகளின் சாமர்த்தியம் வெளியாகிறது; முக்கியமான நிலயங்களெல்லாம் எதிர்க்கப்பட்டன: அவைகளில் ராணுவ-ஸ்தலங்கள் முக்கியமானவை" என்று ஜெர்மனி மூன்று விதங்களாகத் தன்னை ஸ்தோத்திரம் செய்து கொள்ளுகிறது. முதலாவது, லண்டன் பாழாகவில்லை. இரண்டாவது, லண்டன் சுமார் 26 மைல் நீளமும், 700 சதுரமைல் விஸ்தீரணமும் உள்ளது. இவ்வளவு பெரிய இடத்தில் குண்டுகளைப் போடுவதற்கு சாமர்த்தியமொன்றும் வேண்டாம்: குருடன்கூடப் போட்டுவிடுவான். இவர்களுக்குக் கப்பல்களையாவது, தொழிற்சாலைகளையாவது குறிப்புப் பார்த்து வெடிகளைப் போடத்தெரியவில்லை. இவர்களுக்கு சாமர்த்தியம் ஒன்றுமில்லை. மூன்றாவது, ராணுவ-நிலயங்களில் முக்கியமாக குண்டுகளை வீசியதாகச் சொல்லப்படுகிறது. இதிலிருந்து வேறு சில முக்கிய ஸ்தலங்களிலும் இவர்கள் குண்டுகளைப் போட்டது வெளியாகிறது. இவைகள் நகரத்தார்களுடைய வாசஸ்தலங்கள் முதலியவைகளேயாகும்.

எச்சரிக்கை யில்லாமல் படையெடுக்கும் வழக்கம் தனக்குக் கிடையாதென்று ஜெர்மனி சொல்லிக்கொள்ளுகிறது. இது வழக்கம்போல் சொல்லும் பொய்தான். நார்வே, டென்மார்க், ஹாலண்ட், பெல்ஜியம் தேசங்களைப் படையெடுக்குமுன் 24-மணி எச்சரிக்கைகூடக் கொடுக்கவில்லை. உயிர்நிலையான ஸ்தலங்களைப் பிடிக்கிற வரையில், ஆஸ்லோ (நார்வே) தெருக்களில் பாண்டு வாசித்துக்கொண்டு ஜெர்மன் சைன்யங்கள், சிநேகம்போல் பாசாங்கு செய்துகொண்டு ஊர்வலம் வந்தன. கோபன்ஹேகனை (Copenhagen-Denmark)ப் பிடித்தபோது, பழைய கவர்ன்மெண்டே எதிர்க்க வேண்டாமென்று சொன்னதாக பொய்யை ஒலிபரப்புச் செய்தது. படையெடுப்பதாக யாரோ பொய்க் கதை கட்டிவிட்டதாகச் சொல்லிக் கொண்டே, ஹாலண்டுக்குள் பிரவேசித்து, அந்த தேசத்தைப் பிடித்துக்கொண்டது. துரோகத்திலும் பித்தலாட்டத்திலும் இதற்கு ஈடு கிடையாது.

12—9—40.

இதாலிய விமானங்கள் ஜாபா (Jaffa)வை எதிர்த்து, ரஸ்தாக்களைச் சேதப் படுத்தியதாகச் சொல்லப்படுகிறது. பிரிடனை எதிர்த்தால் பாலஸ்தீன—அராபியர் களுக்குச் சந்தோஷமாம். அது எப்படி யிருந்தாலும் சரி, ஜாபா—அராபியர்களைக் கொன்றதில் பாலஸ்தீன-அராபியர்களுக்கு சந்தோஷமேற்படாதென்பது நிச்சயம். இதில், மற்றொரு வெட்கக்கேடான சம்பவமொன்று நடந்தது. இடம் தெரியாமல் ஜாபாவில் போடவேண்டிய குண்டுகளை டெல் அவிவ் (Tel Aviv) என்ற அடுத்த ஊரில் இதாலியர்கள் போட்டு விட்டார்களாம். ஆகவே ஜாபா-அராபியர் தப்பினார்கள். டெல் அவீவில் இருந்த 7 அராபியர் மண்டைகள் மட்டும் உருண்டன. இதோடு, அங்கிருந்த 104 யூத-நகரத்தார்களும் மாண்டார்கள்.

13—9—40.

"மிஸ்டர் சர்ச்சிலும், 'ராய்டர் நிருபரும் கூடிப்பேசிக்கொண்டு லண்டன்-எதிர்ப்பை ஒளிக்கிறார்கள்" என்று ஒரு ஜெர்மன் அறிக்கை சொல்லுகிறது. ஒளிக்கவேயில்லை. இவ்விதம் ஜெர்மனி புகார்செய்த தினத்திலேயே 1500 வார்த்தைகளடங்கிய செய்தி, ஒன்று இந்த மின்னல்-படையெடுப்பைப் பற்றி ராய்டர் இந்தியாவுக்கு ஒலிபரப்பினார்.

14—9—40.

லண்டன் நகரத்திலிருக்கும் விக்டோரியா ரெயில்வே ஸ்டேஷன் பழுதாய் விட்டதாக ஜெர்மன் ரேடியோ இந்துஸ்தானியில் சொல்லுகிறது. இது உண்மையே; ஆனால் பழுதானதற்குக் காரணம் விமான-எதிர்ப்பல்ல. ஜெர்மன் விமானம் (டோர்னியர்) ஒன்றின் யந்திரபாகமொன்று உடைந்து ஸ்டேஷன்மேல் விழுந்த அதிர்ச்சியால், ஸ்டேஷன் முன்பிராகாரம் பழுதாய்விட நேரிட்டது.

16—9—40.

'பிரிடனின் வெற்றியால் அராபியர்களுக்கு க்ஷேமம்' என்று, டிரான்ஸ்-ஜோர்டன் அரசன் அமீர் அப்துல்லா சொன்னதாக இதாலி ஒப்புக்கொள்ளுகிறது. ஆனால் அராபியர்களுக்கு இந்த அரசன் பிரதிநிதியல்லவாம். இதேமாதிரி ஹைபா-அராபியர்களும் பேசியிருக்கிறார்கள்; இவர்களுக்கும் பிரதிநிதித்துவம் இல்லையாம். மேலும், எகிப்து அராபியர்களுக்காகப்பேச எகிப்த் மன்னர் பாரூக்குக்கும், ஹாஸான் சப்திபாஷாவுக்கும் பாத்தியம் இல்லையாம். ஸிரியர்கள் இதாலிக்கு விரோதமாகப் பேசியதாகவும் இதாலி ஒப்புக்கொள்ளுகிறது. ஸிரியர்கள் ஸிரியாவைப்பற்றிப்பேச உரிமையில்லையென்று சொன்னாலும் சொல்லி விடுவார்கள். அதேமாதிரி, அராபியரைப்பற்றிப் பேசும் பாத்தியம் இதாலிக்கே ஒழிய, அராபியருக்கு இல்லையென்றும் சொல்லி விடுவார்கள்.

புதுக்கோட்டை ஸமஸ்தான யுத்த அறிக்கை நிலயத்தின் பிரஸங்க நிகழ்ச்சி முறை.

பிரஸங்கம் XIV.

1940—				மணி.
அக்டோபர் 12, சனிக்கிழமை ...	டவுன் ஹால் ...	மாலை	6.30
13, ஞாயிற்றுக்கிழமை.	புதுக்கோட்டை டவுன் முஸ்லீம் சங்கம்.	,,	5.00
	மிதிலைப்பட்டி ...	,,	5.30
	காரையூர் ...	,,	5.30
14, திங்கட்கிழமை ...	காலேஜ் (A) ஆங்கிலம் ...	காலை	10.25
	ராணி பெண்பாடசாலை ...	,,	10.25
	கரம்பக்குடி ...	மாலை	5.30
	வேகுபட்டி ...	,,	5.30
15, செவ்வாய்க்கிழமை.	காலேஜ் (B) தமிழ் ...	காலை	10.25
	விராலிமலை ...	மாலை	5.30
	நச்சாந்துபட்டி ...	,,	5.30
	பனையபட்டி ...	,,	5.30
	புதுக்கோட்டை டவுன் சாந்தார் கோவில் அம்மன் சன்னதி.	,,	6.30
16, புதன்கிழமை ...	லேடீஸ் கிளப் (ராணி ஸ்கூலில்)..	,,	5.00
	குருவிக்கொண்டான் பட்டி.	,,	5.30
17, வியாழக்கிழமை ...	புதுப்பட்டி (பொன்னமராவதி).	,,	5.30
	ஆலங்குடி ...	,,	5.30
18, வெள்ளிக்கிழமை...	C.S.M. பள்ளிக்கூடம் ...	காலை	10.00

Sri Brihadamba State Press, Pudukkottai. 4,400—5-10-40.